FORB Learning Platform

# எழுத்துப்பிரதி: மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் உள்ளடக்கங்கள் - பலவந்தப்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பு

மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் ஒரு முக்கிய பரிணாமம் பலவந்தப்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமை ஆகும். ஏதேனுமொரு விடயத்தை உங்களை செய்யவைக்கும்பொருட்டு யாரேனுமொருவர் பலம் அல்லது அச்சுறுத்தலைப் பயன்படுத்துகின்றபோது அது பலவந்தப்படுத்தல் ஆகும்.

ஒவ்வொருவருக்கும் தங்கள் மதம் அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான அல்லது மாற்றுவதற்கான உரிமை உண்டு என்பது மதம் அல்லது நம்பிக்கைக்கான சுதந்திரத்தின் பிரதான பரிணாமம் ஆகும். மதம் அல்லது நம்பிக்கை மற்றும் அவற்றின் வெளிப்பாடு ஆகியவை தன்னார்வமாக இருக்க வேண்டும் என இதனை வேறுவழியில் குறிப்பிடலாம்.

பலவந்தப்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாக்கப்படுவதற்கான உரிமையினை விளக்கி கூறுவோமாயின், அரசிற்கு மட்டுமல்ல, எந்தவொரு நபருக்கும், மதத் தலைவர்களுக்கும் அல்லது ஏனைய நபர் அல்லது குழுக்களுக்கும் தங்களுடைய நம்பிக்கைகள் அல்லது நடைமுறைகளை ஏனையோர் மீது திணிப்பதற்கான உரிமை இல்லை என கூறலாம். அவர்களுடைய மதம் அல்லது நம்பிக்கையினைக் கொண்டிருக்குமாறோ, பேணுமாறோ அல்லது மாற்றுமாறோ பலவநந்தப்படுத்துவதற்கான உரிமை இல்லை.

<u>குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம், உறுப்புரை 18 பந்தி 2</u>

“எவரும் தான் தெரிவு செய்யும் ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கும் ஏற்றுக்கொள்வதற்குமான சுதந்திரத்திற்குக் கேடு விளைவிக்கும் வலுக்கட்டாயத்திற்கு உட்படுத்தப்படலாகாது.”

இந்த பரிணாமம் அரசாங்கங்கள் மக்களை பலவந்தப்படுத்துவதனைத் தடுப்பது மட்டுமல்லாமல், சமூகத்தில் உள்ள பிற நபர்களிடமிருந்தோ அல்லது குழுக்களிடமிருந்தோ மக்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் அல்லது வன்முறைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையை அரசுகளுக்கு வழங்குகிறது.

இருந்தபோதிலும், பலவந்தப்படுத்தலுக்கான உதாரணங்களை அச்சுறுத்தல்கள், வன்முறை அல்லது அபராதம் அல்லது சிறைத்தண்டனை போன்ற தண்டனைகள் வடிவில் நாம் உலகெங்கிலும் காண்கிறோம். மாற்றத்திற்கு சன்மானமாக வேலைகளை வழங்குவது, அல்லது ஒரு மதம் அல்லது நம்பிக்கையை ஏற்க மறுத்தால் சுகாதாரம் மற்றும் கல்விக்கான அவர்களது அணுகுதலை நிறுத்துதல் போன்ற வகையில் பலவந்தப்படுத்தல் நுட்பமாகவும் மேற்கொள்ளப்படலாம்.

சில நேரங்களில் அரசு சட்டத்தின் மூலமாக உத்தியோகபூர்வமாக அல்லது உள்ளூர் மட்டத்தில் உள்ள அதிகாரிகளின் நடவடிக்கைகள் மூலமாக பலவந்தப்படுத்தலில் ஈடுபடுகின்றது.

பஹாய் சமுதாயம் ஈரானில் மிகப்பெரிய முஸ்லிம் அல்லாத மத சிறுபான்மையின சமுதாயமொன்றாகும். 1979 ஆம் ஆண்டு புரட்சிக்கு பின்னர், பஹாய் சமூகத்தினரை இஸ்லாமிற்கு மாற்றுகின்ற முயற்சியில் அரசாங்கக் கொள்கையொன்றாக அவர்கள் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட துன்புறுத்தல்களுக்கு ஆளாகி வருகின்றனர். புரட்சியைத் தொடர்ந்து வந்த 10 ஆண்டுகளில், 200 க்கும் மேற்பட்ட பஹாய்கள் கொல்லப்பட்டனர், நூற்றுக்கணக்கானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர் அல்லது சிறையில் அடைக்கப்பட்டனர், மற்றும் பல்லாயிரக்கணக்கானோர் வேலைகள், கல்வி மற்றும் பிற உரிமைகளுக்கான

அணுகதலை இழந்தனர். இவை அனைத்தும் அவர்களின் மத நம்பிக்கையின் காரணமாக மட்டுமே இடம்பெற்றன.

2017 டிசம்பர் மாதமளவில், ஈரானில் மத நம்பிக்கைகளைக் கொண்டிருந்தமைக்காக சிறையிலடைக்கப்பட்ட 97 பஹாய் கைதிகள் இருந்தனர். இதில் தேசிய மட்ட பஹாய் தலைவர்கள் ஆறு பேரும் உள்ளடங்குகின்றனர்.

இந்த உதாரணம் பராபட்சம் மற்றும் பலவந்தப்படுத்தல் என்பவற்றுக்கிடையிலான தொடர்பை விளக்குகிறது. ஈரானில் உள்ள பஹாய்கள் பல்கலைக்கழகத்திற்குச் செல்வதற்கும், சிவில் சேவையில் பணியாற்றுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த பாரபட்சமான சட்டம் பலவந்தப்படுத்துகின்ற ஒன்றாகும். மாணவர் அல்லது பணியாளர் ஒருவர் பஹாய் என்று கண்டறியப்பட்டால், அவர்கள் ஒன்றில் இஸ்லாமிற்கு மாறவேண்டும் அல்லது மாணவர் அல்லது பணியாள் என்ற பதவியை இழக்க வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

சில நேரங்களில் வன்முறையான தேசியவாத அல்லது தீவிரவாத குழுக்கள் தங்களது மதத்தை அல்லது நம்பிக்கைகளை மாற்றுமாறு மக்களை கட்டாயப்படுத்துகின்றன. இஸ்லாமிய அரசாக அழைக்கப்படுகின்ற தாஹேஷ், யெசிடிஸ் மற்றும் கிறிஸ்தவர்களை மதம் மாறும்படி கட்டாயப்படுத்தினர் என்பதுடன் இதற்கு மறுக்கும் மக்களைக் கொலை செய்தனர். இந்தியாவில் இந்து தேசியவாதிகள் தொடர்புறுகின்ற வகுப்புவாத வன்முறையுடன் தொடர்புற்றரீதியில், இந்து மதத்திற்கான கட்டாய மத மாற்றங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மியான்மாரில், கிறிஸ்தவர்கள் தங்களது நம்பிக்கையை துறந்து பௌத்தத்திற்கு மாறும்படி இராணுவத்தினரால் துப்பாக்கி முனையில் கட்டாயப்படுத்தப்பட்டுள்ள சம்பவங்களும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய ஆபிரிக்க குடியரசின் சில பகுதிகளில், முஸ்லிம்களும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறாவிட்டால் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

பலவந்தப்படுத்தல் மீதானத் தடை மக்கள் தங்கள் மதத்தை அல்லது நம்பிக்கையை கொண்டிருப்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும் அல்லது மாற்றுவதற்கும் முறையாக ஏற்புடையதாகும் என்றாலும், பலர் மதத்தினை பின்பற்றுவது தொடர்பாக அரச மற்றும் சமூக பலவந்தப்படுத்தலை அனுபவிக்கின்றனர். இவ்வகையான பலவந்தப்படுத்தலை விளக்கும் ஒரு பிரச்சினை பெண்களின் ஆடை. சில நாடுகளில் பெண்கள் மத ஆடைகளை அணிய வேண்டும் என்று சட்டப்படி கோரப்படுகிறார்கள், ஏனைய நாடுகள் பெண்கள் அவ்வாறு உடையணிவதற்கு தடை விதிக்கின்றன. பெண்கள் மத உடைகளை அணிகின்றபோது தங்கள் சமூகத்திற்கு வெளியே உள்ளவர்களிடமிருந்தும், அணியாதபோது தங்கள் சொந்த சமூகத்திலிருந்தும் துன்புறுத்தல்களை எதிர்கொள்ளுகின்றனர்.

பல நபர்கள் பலவந்தப்படுத்தலினால் பாதிக்கப்படலாம். பல நாடுகளில், அரச சித்தாந்தத்திலிருந்து அல்லது சமூக நெறியில் இருந்து வேறுபடுகின்ற மதக் கருத்துக்கள் அல்லது நடைமுறைகளைக் கொண்டுள்ள மக்கள் பலவந்தப்படுத்தப்படுகின்றனர். சிறுபான்மையினர், நாத்திகர்கள், மதம் மாறியவர்கள் அல்லது ‘அந்நியமாகக்’ கருதப்படும் மதங்களைக் கொண்டவர்கள் பெரும்பாலும் பாதிக்கப்படுகிறார்கள். மதக் குழுக்களுக்குள், மதவெறியர்கள், நிந்தனை செய்பவர்கள் அல்லது தங்கள் மதத்தை முறையாக கடைப்பிடிக்கத் தவறியவர்கள் எனக் கருதப்படும் மக்கள் தங்கள் நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகளை மாற்றுவதற்கான பலவந்தப்படுத்தலால் பாதிக்கப்படலாம். இத்தகைய வற்புறுத்தல் அரசு, அவர்களது குடும்பம் அல்லது சமூகத்திலிருந்து வரலாம்.

மொத்தத்தில், பலவந்தப்படுத்தலானது அச்சுறுத்தல்கள், வன்முறை, பாரபட்சம் அல்லது அபராதம் அல்லது சிறைத்தண்டனை போன்ற தண்டனைகளை உள்ளடக்கியது என்பதுடன் இது அரசிலிருந்து அல்லது சமூகத்தில் உள்ள மக்கள் மற்றும் குழுக்களினால் செய்யப்படலாம். எந்தவொரு நபரும் பலவந்தப்படுத்தலுக்கு உட்படுத்தப்படக்கூடாது எனக் கூறுவதனூடாக, சர்வதேச மனித உரிமைகள் சட்டம் அரசு மக்களை பலவந்தப்படுத்துவதனைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல், சமூகத்திலுள்ள பலவந்தப்படுத்தல்களைத் தடுகப்பதற்கா மற்றும் நிறுத்துவதற்காக வினைத்திறனாக செயலாற்றுவதன்மூலமாக மக்களைப் பாதுகாக்கின்ற கடைமையினையும் அரசுகளுக்கு வழங்குகின்றது.

பலவந்தப்படுத்தலிலிருந்து பாதுகாக்கப்படுவது பற்றிய மனித உரிமை ஆவணங்களின் பிரதிகள் உள்ளடங்கலாக அது பற்றிய கூடுதல் தகவல்களை இணையதளத்தில் உள்ள பயிற்சி ஆவணங்களில் காணலாம்.

Copyright: SMC 2018